# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மார்க்சிஸ்ட் கட்சியுடன் பேச்சுவார்த்தை!





2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழக குழுவினர் நேற்று (10.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமையிலான குழுவினருடன் 2 ஆம் கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தினர்.






கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.3.2026) முகாம் அலுவலகத்திலிருந்து, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில், கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை, கலைஞர் நூலகம், மண்டல இளைஞர் அணி அலுவலகம் ஆகியவற்றை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ. பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இல. பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, ப. அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ். சீனிவாசன், சி.ஆனந்தகுமார், ஜி.பி. ராஜா, கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### வளைகுடா நாடுகளில் போர்ச் சூழல்:


# வணிக எரிவாயு தட்டுப்பாடு - மாற்று ஏற்பாடு செய்திடுவீர்!

## பிரதமருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை , மார்ச் 12 -

“வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்” என்று பிரதமர் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்சூழல் காரணமாக தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தலைமைச் செயலகத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:



அமெரிக்கா ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று விரிவாக ஆய்வு செய்தேன். தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்திட வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.

### அரியலூர் மாவட்டத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில்

# செந்துறை புதிய போக்குவரத்துக் கழக பணிமனை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், மார்ச் 12-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டல இயக்கப் பகுதியில் உள்ள அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு கூடுதலாக பேருந்து வசதி செய்யும் பொருட்டு செந்துறை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செந்துறை புதிய போக்குவரத்து கழக பணிமனையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, சென்னை மாநகர போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குநர் T.பிரபு சங்கர்,அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தெரிவித்ததாவது:

செந்துறை பகுதிக்கு பேருந்து பணிமனை இன்று தொடங்கப்பட்டுள்ளது. இனி கும்பகோணம் கோட்டத்தில் ஒவ்வொரு வாரம் ஆய்வு பட்டியலில் செந்துறை பணிமனை இடம் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களின் முயற்சியின் காரணமாக இது சாத்தியமானது. தமிழ்நாட்டில் சுமார் 20000 பேருந்து சேவை வழங்கப்படுகிறது. அவற்றிலிருந்து சுமார் 20 முதல் 30 பேருந்துகள் செந்துறை பணிமனையிலிருந்து தினசரி துவக்கப்பட இருக்கிறது. இப்பகுதியில் உள்ள மகளிருக்கு விடியல் பயண பேருந்து சேவைகளும் இனி எளிதாக கிடைக்கப்பெறும். போக்குவரத்து சேவை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். போக்குவரத்து துறை இல்லை எனில் வளர்ச்சி என்பது இருக்காது. தமிழ்நாடு அரசு சிறப்பான போக்குவரத்து சேவையை வழங்கி வருகிறது. செந்துறை பணிமனையின் மூலம் இப்பகுதி மக்களுக்கு எளிதாகவும், சிறப்பானதாகவும் பேருந்து வசதி ஏற்படுத்தப்படும். இப்பணிமனை சிறப்பாக இயங்கும் வகையில் போக்குவரத்து துறை அலுவலர்கள் அனைவரும் தொடர்ந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தெரிவித்தார்.

பின்னர், செந்துறை புதிய போக்குவரத்து கழக பணிமனையினை திறந்து வைத்து தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க செந்துறைக்கு வழங்கப்பட்டுள்ள புதிய பேருந்து பணிமனை இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நம்முடைய அரியலூர் மாவட்ட மானது ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தோடு இருந்த போதும், பெரம்பலூர் மாவட்டத்துடன் இருந்த போதும் செந்துறை, ஆண்டிமடம் உள்ளிட்ட பகுதிகள் கடைகோடி பகுதிகளாக இருந்தன. முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் நம்முடைய பகுதிக்கென ஒரு அமைச்சர் பதவியினை எனக்கு வழங்கியதன் காரணமாக இப்பகுதி களுக்கான வளர்ச்சி பணிகளை தொடர்ந்து மேற்கொள்கின்ற வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. அரியலூரில் இருந்து செந்துறை வரை, செந்துறையில் இருந்து ஜெயங்கொண்டம் வரை உள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டு பெரிய நகரங்களுக்கு இடையே பயணிக்கின்ற வாய்ப்பை போன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த பகுதியின் மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்கு நீண்ட நாட்களாக செந்துறை பகுதி மக்களின் கோரிக்கையாக இருந்த 110 கிவோ துணை மின் நிலையம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோன்று பிலாக்குறிச்சி கிராமத்தில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கு அங்கு துணை மின் நிலையம் அமைத்தால் அப்பகுதியில் உள்ள குறைந்த மின்னழுத்த பிரச்சனைக்கு தீர்வு காண இயலும் என்பதன் அடிப்படையில் பிலாக்குறிச்சி துணை மின் நிலையம் அமைப்பதற்க அடிக்கல் நாட்டப்படவுள்ளது. அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் சிலால், குமிழங்குழி, குன்னம் சட்டமன்ற தொகுதியில் கொளக்காநத்தம் 3 இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. அரியலூர் சட்டமன்ற தொகுதி, ஏலாக்குறிச்சியில் நீண்ட நாட்களாக தாமதமாக இருந்த துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளும் துவங்கப்பட்டுள்ளது.

மிக பின்தங்கிய மாவட்டமாக இருந்த அரியலூரில் இத்தகைய வளர்ச்சி பணிகள் நடைபெறுகிறது என்றால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் நம்முடைய பகுதிக்கு கேட்கின்ற பணிகளையும் செய்து கொடுக்கின்ற காரணத்தினால்தான் இத்தயை வாய்ப்புகள் கிடைக்கின்றன. 2 வருடத்திற்கு முன்பாக குன்னத்தில் பேருந்து பணிமனை அமைக்கப்பட்டது. தற்போது செந்துறையில் பேருந்து பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் இருக்கின்ற குக்கிராமங்களுக்கு பேருந்து வசதி தேவை என்றால் நீட்டிக்கும் போது சிரமமாகும். இனி செந்துறை பணிமனையிலிருந்து பேருந்துகள் இயக்கப்படும் போது அனைத்து குக்கிராமங்களுக்கும் நகரப்பேருந்துகள், குறிப்பாக மகளிர் விடியல் பயணப் பேருந்து சேவைகள் கிடைக்கப் பெறும் வாய்ப்பு இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எங்கு பேருந்து தேவை இருக்கிறதோ அங்கு பேருந்து சேவை வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள்.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் விடியல் பயணம் என்பது இல்லாமல் இருந்தது. தற்போது அப்பகுதிகளுக்கும் நகர பேருந்து வசதியை ஏற்படுத்தி அங்கும் மகளிர் விடியல் பேருந்து சேவையை வழங்கியவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம், கொல்லிமலை பகுதியில் கீழ் உள்ள பணிமனையில் இருந்து மலை மீதுள்ள பகுதிகளுக்கு பேருந்து சென்று வரவேண்டும் என்றால் 40 கி.மீ ஆகும். தற்போது கொல்லிமலை பகுதியில் புதிய பணிமனை அமைப்பதற்கு உத்தரவிட்டு கடந்த வாரம் திறந்து வைத்தார்கள். மலைப்பகுதியில் உள்ள குக்கிராமங்களில் இருக்கின்ற மக்களுக்கும் பேருந்து சேவை வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவை என்பது மிக மிக அத்தியாவசியமானதாகும். தமிழ்நாட்டில்தான் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி இருக்கிறது. சில மாநிலங்களில் பேருந்து வசதிகள் இருந்தாலும் குக்கிராமங்களில் உள்ள பகுதிக்கு பேருந்து வசதிகள் வழங்கப்படுவதில்லை ஆனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்து சேவை வழங்கப்படுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனியார் வசிமிருந்த பேருந்துகளை அரசு பேருந்துகளாக, பொது சேவை நிறுவனமாக கொண்டு வந்ததன் காரணமாகத்தான் குக்கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமம், நகரம் என்றில்லாமல் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. பள்ளிக்கு பேருந்து வசதி வேண்டும் என மாணவர்கள் கேட்கின்ற அளவிற்கு மாணவர்களின் மன நிலையும் முன்னேற்றம் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு கொடுக்கின்ற சேவைகள்தான் இதற்கு காரணமாகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் சென்னையில்தான் பள்ளிக்கூடத்திற்கென பேருந்து சேவையினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்கள். படிப்படியாக இத்திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது போன்ற திட்டங்களால் தான் டெல்லியில் நடைபெற்ற விழாவில் சென்னை மாநகரப் போக்குவரத்து கழகத்திற்கு சிறப்பான சேவைக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து துறை என்பது மிகச்சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. அனைத்து மேலாண் இயக்குநர்களும் சிறப்பான ஒத்துழைப்பினை வழங்கியதன் காரணமாக பொதுமக்களுக்கு பண்டிகை உள்ளிட்ட அனைத்து காலங்களிலும் சிறப்பாக பேருந்து சேவை வழங்க முடிந்தது. தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் 13000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள். ஏறத்தாழ 11900 பேருந்துகள் வாங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 8200 புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. இரண்டு நாட்களுக்கு முன்னர் இராமேஸ்வரத்தில் இயற்கை எரிவாயுவில் இயங்குகின்ற பேருந்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

சூற்றுசூழலை பாதுகாக்கின்ற வகையில் சென்னையில் மின்சார பேருந்துகள் இயக்கப்படுவதை போல தமிழ்நாடு முழுவதும் இயற்கை எரிவாயுவில் இயக்கப்படுகின்ற 750 பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 12 பேருந்துகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போக்குவரத்து துறைக்கு அளிக்கின்ற ஆதரவும் உற்சாகத்தின் காரணமாக போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. செந்துறை பகுதியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இப்பணிமனை அமையும். பொதுமக்கள் நல்ல முறையில் பேருந்து சேவை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பகுதியில் பேருந்து பணிமனை அமைவதற்கு உடனடியாக இடவசதி, நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும், செந்துறை பணிமனையில் 12 புறநகரப் பேருந்துகள், 8 நகரப் பேருந்துகள் மற்றும் 3 மாற்றுப் பேருந்துகள் என மொத்தம் 23 பேருந்துகள் இயக்கம் செய்யப்படவுள்ளது. இப்பேருந்துகள் மூலம் தினசரி 92825 கி.மீ இயக்கம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ. ரா. சிவராமன், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப) லிட் கே.தசரதன், பொது மேலாளர் திருச்சி து.சதீஷ்குமார், கோட்ட மேலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், பெரம்பலூர் ஆர்.ராம்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள்

பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், வழக்கறிஞர் பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட பிரதிநிதி காளமேகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாரிமுத்து மற்றும்

போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர்கள், போக்குவரத்துத் துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய,கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், அணைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வேப்பந்தட்டையில் , மகாதேவி ஜெயபால் தனது சொந்த செலவில் புனரமைக்கப்பட்ட

# ரூ.1.இலட்சம் மதிப்பில் பேரறிஞர் அண்ணா சிலை!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.

## திறந்து வைத்தார்! வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், மார்ச் 12-

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் கடந்த 2009ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை புதியதாக நிறுவப்பட்டிருந்தது. அப்போதைய தகவல் தொழில் நுட்பத்துறை ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா, அந்த சிலையை திறந்து வைத்தார். அந்த சிலை வர்ணங்கள் உரிந்து,சேதமடைந்திருந்தது. பெரம்பலூர் மாவட்ட மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தனது சொந்த செலவில், ரூ.1. இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையை மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.திறந்து வைத்து, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ., மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், செ.நல்ல தம்பி, ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பாளை. மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.அழகுவேல், செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, பசும்பலூர் கிளைச் செயலாளர் ஜெயபால், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி பேரூர் பகுதிகளில் இருந்து த.வெ.க.வினர் 15 பேர் அக்கட்சியில் இருந்து விலகி பேரூர் கழக செயலாளர் சு.பாலமுருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது தி.மு.க.வினர் உடனிருந்தனர்.